දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax ) 0112692913

විද්‍යුත් තැපෑල, ) postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )
website )


සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

මගේ අංකය ) FHB/GWH/2018/08
எனது இல )
My No. )

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி ) 2018/02/08
Date )

# සෞඛ්‍ය, පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
# சுகாதார,போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
# Ministry of Health, Nutrition & Indigenous Medicine

---

பொது சுற்றறிக்கைக் கடிதம்: 02-33/2018.

சகல மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
சகல பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்
சகல நிறுவனங்களினதும் தலைவர்கள்

**<u>பெண்களின் பெண்ணுறுப்பை சிதைத்தலில் (FGM) மருத்துவ துறை சார்ந்தோர் ஈடுபடுதல்</u>**

FGM எனப்படும் பெண்ணுறுப்பை சிதைத்தலானது ஆபிரிக்கா கண்டத்தில் சில நாடுகளிலும் சில மத்திய கிழக்கு நாடுகள் உட்பட்ட ஆசிய கண்டத்து நாடுகளிலும் காணப்படும் ஒரு வழக்கமாகும். இதை 'பெண்கள் விருத்தசேதனம்' (FGM) என்றும் அழைப்பதுண்டு. இதன் மூலம் பெண்ணுறுப்பிற்கு காயம் ஏற்பத்தப்படுவதன் மூலம் அதில் மாற்றம் ஏற்படுத்தப்படுகின்றது. பொதுவாகக் காணப்படாவிட்டாலும், இலங்கையில் சல பகுதிகளில் சில தனிப்பட்ட சாரார் மத்தியில் இவ்வழமை இருந்து வருகின்றது.

இவ்வழமையில் சில கெடுதியான சுகாதார பின்விளைவுகள் இருப்பதை சில வேளை நீங்களும் அறிந்திருபபீர்கள். பாராளுமன்றத்தின் 'மகளிர் மற்றும் பால் அடிப்படை துறைசார் மேற்பார்வை குழுவும்' இவ்வழமை பாதிப்பு மிக்கது என இனங்கண்டு இதை இலங்கையில் ஒழிப்பதற்கான செயன்முறை ஒன்றை முன்னெடுத்துள்ளது. இதன் ஒரு அங்கமாக இச்செயற்பாட்டில் ஈடுபடுவதில் இருந்து தவிர்ந்து கொள்ளுமாறு வலியுறுத்தி மருத்துவத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஒரு சுற்றறிக்கையை அனுப்பி வைக்குமாறு மேற்படி குழு, சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சைக் கேட்டுள்ளது.

இதனடிப்படையில் FGM வழமையில் உள்ள தீமைகளை விவரித்து குடும்ப சுகாதார பணியகம் ஒரு ஆவணத்தை தயார் செய்துள்ளதுடன், இது தொடர்பான மருத்துவம் மற்றும் ஏனைய துறைகளைச் சார்ந்த, இது விடயத்தில் பொறுப்புள்ளவர்களுடனான ஒரு கலந்தாலோசிப்பையும் ஏற்பாடு செய்திருந்தது. கீழ் காணும் விடயங்கள் அக்கலந்தாலோசிப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டு பங்கேற்ற சகலராலும் ஏற்கப்பட்டது:

- FGM, அது எந்த மட்டத்தில் மேற்கொண்ட போதிலும், அதில் எவ்வித மருத்துவ நன்மைகளும் கிடையாது
- FGM, அது எந்த மட்டத்தில் மேற்கொண்ட போதிலும், அது பெண்பிள்ளைகளுக்கு / பெண்களுக்கு குறுகிய கால மற்றும் நீண்ட கால உடல், உள பாதிப்பையும் நோவினையையும் மட்டுமே ஏற்படுத்தும்.
- FGM ஒரு வகை மனித உரிமை மீறலாவதுடன் சிறார்களின் உறுதிமொழியின் கீழ் ஒரு 'சித்திரவதை' என வரைவிலக்கணம் செய்யலாம்.

FGM ஐ மேற்கொள்ளல் அல்லது அதை ஊக்குவித்தல் என அத்துடன் எந்த விதத்தில் தொடர்பானாலும் அது ஒரு ஒழுக்கமற்ற செயற்பாடாகவே கருதப்படும். ஆக, 'மனித இனத்திற்கு தீமை செய்யாமை' என்பதே மருத்துவ உத்தியோகத்தின் முக்கிய கோட்பாடாக இருப்பதால், இச்செயற்பாடுடனான சகல தொடர்புகளை விட்டும் முற்றாக தவிர்ந்து கொள்ளும்படி மருத்துவ சேவையில் ஈடுபடும் அனைவரும் இத்தால் அறிவுறுத்தப்படுகின்றனர். இவ்வறிவுறுத்தலை கடைபிடிக்காது FGM ஐ மேற்கொள்ளும் அல்லது அதை ஊக்குவிக்கும் மருத்துவ சேவை சார்ந்தவர் எவராக இருப்பினும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

....................................

டாக்டர் அனில் ஜயசிங்ஹ
பொது சுகாதார சேவைகள் பணிப்பாளர்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health, Nutrition & Indigenous Medicine,
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

செயலாளர், சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
பிரதி பணிப்பாளர் நாயகம் / மருத்துவ சேவைகள்
பிரதி பணிப்பாளர் நாயகம் / பொது சுகாதார சேவைகள்
பணிப்பாளர் மகப்பேறு மற்றும் சிசு சுகாதாரம், குடும்ப சுகாதார பணியகம்
பணிப்பாளர் / சுகாதார கல்விக்கான தேசிய நிறுவனம்
பிரதான சுகாதார மருத்துவ / அதிகாரி கொழும்பு மாநகர சபை
மாகாண சமூக மருத்துவ உபதேசகர்
மருத்துவ அதிகாரிகள் மகப்பேறு மற்றும் சிசு சுகாதாரம்
சுகாதார மருத்துவ அதிகாரிகள்